**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி</u>**

**<u>S.C.No.56/2020</u>**

**தேதி – 07.08.2025**

**(அ.சா.1) – திரு . கிருஷ்ணசாமி**

**<u>எதிரிகள் – ஆஜர்</u>**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

**1. என்னுடைய சொந்த ஊர் பழைய ஆயக்குடி. அங்குதான் என்னுடைய பூர்வீக வீடு உள்ளது. பழனி அடிவாரம், குரும்பர் மடத்தில் சுமார் 2014 ஆம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறேன். பழனி அடிவாரம், குரும்பர் மடம் என்பது குரும்பர் சமுதாயத்தினர் அனைவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட மடம் என்று சொன்னால் சரிதான். அந்த மடத்தில் தங்கும் விடுதி, திருமண மண்டபம் மற்றும் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மடத்திற்கு பாத்தியப்பட்ட கடைகளில் 2 வது எதிரி வைத்திருக்கும் கடைக்கு பக்கத்தில் 1 வது எதிரி ஐயப்பன் கடை வைத்திருக்கிறார். 1 வது எதிரி மடத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கடை வைக்கவில்லை என்றால் சரிதான்.**

**2. வேறு யார் கடை நடத்துகிறார்கள் என்று கூற இயலுமா என்றால் அந்த சமயம் 2 ம் எதிரியைத் தவிர வேறு யாரும் கடை நடத்தவில்லை. அந்த மடத்தில் கடைக்குத் தனியாகவும், மடத்திற்குத் தனியாகவும் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது. அந்த மின் இணைப்பு எண் உள்ளிட்ட விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த மடம் உள்ள ரோடு எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். அந்த மடத்திற்கு அருகில் கடைகள், வணிக வளாகம் உள்ளது என்றால் சரிதான். மடத்திற்கு அருகில் ஆட்டோ ஸ்டாண்டு உள்ளது என்றால் சம்பவ சமயம் அவ்வாறான ஆட்டோ ஸ்டாண்டு எதுவும் இல்லை.**

3. 2வது எதிரி எவ்வளவு நாட்களாக அங்கு கடை நடத்துகிறார் என்று கேட்டால் என் மைத்துனர் அந்த மடத்தை குத்தகைக்கு எடுப்பதற்கும் முன்பிருந்தே அங்கு கடை நடத்துகிறார். என்னுடைய மைத்துனர் எந்த வருடம் குத்தகைக்கு எடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் எதிரி ஐயப்பன் மடத்திற்கு அருகில் எவ்வளவு காலமாக கடை நடத்துகிறார் என்றால் நான் அங்கு குடி வந்தது முதல் தற்போது வரை அவர் கடை வைத்திருக்கிறார். அதே ரோட்டில்தான் 2ம் எதிரியின் நிரந்தர குடியிருப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. மடத்திற்கு மின் இணைப்பு மற்றும் அதற்கான ரசீதுகள் மற்றும் குடிநீர் இணைப்பு யார் பெயரில் என்றால் மடத்தின் தலைவர் பெயரில் உள்ளது. அந்த மடத்தின் அப்போதைய தலைவர் பெயர் ராமசாமி. தற்போதும் அவர்தான் தலைவராக உள்ளார். அந்த மடத்தில் வசிப்பதற்கு தனியாக வீடு உள்ளதா என்றால் இல்லை. அந்த மடத்தில் நான், என் மனைவி, என்னுடைய மகன், என்னுடைய மகள் மற்றும் என்னுடைய மாமியார் ஆகியோர் குடியிருக்கிறோம். என்னுடைய தகப்பனார் என்னுடன் வசிக்கவில்லை. என்னுடைய மைத்துனர் அவரது குடும்பத்துடன் பாலசமுத்திரத்தில் குடியிருக்கிறார். என்னுடைய மைத்துனர் சார்பாக மடத்தை யாராவது மேற்பார்வை செய்தார்களா என்றால் இல்லை. என்னுடைய மைத்துனர் மடத்தை 3 வருடத்திற்கு குத்தகைக்கு எடுத்திருந்தார். தற்போது என்னுடைய இரண்டாவது மைத்துனர் அதனை குத்தகைக்கு எடுத்துள்ளார்.

5. குத்தகைக்கு எடுத்தது சம்பந்தமாக ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அது பற்றி போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் ஞாபகமில்லை. மண்டபத்திற்கு பாத்தியப்பட்ட கடை, விடுதி ஆகியவற்றிற்கு ரசீதுகள் கொடுத்து பராமரித்து வருகிறோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, தலைவருக்குத்தான் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் என்னுடைய முதல் மைத்துனர் என்ன தொகைக்கு குத்தகைக்கு

எடுத்தார் என்ற விபரமும், தற்போது என்னுடைய இரண்டாவது மைத்துனர் என்ன தொகைக்கு குத்தகைக்கு எடுத்துள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய மனைவி மற்றும் மாமியாருக்கு மேற்படி விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

6. 2 வது எதிரி எவ்வளவு தொகைக்கு குத்தகைக்கு எடுத்தார், என்ன வாடகை கொடுத்து வருகிறார் என்பது பற்றிய விபரங்களை போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. மடத்திற்கு வரும் வருமானத்தைக் குறித்து வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்யப்படுகிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரத்தில் மடத்திற்கு அருகில் யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால், மடத்தின் நிர்வாகிகள் சுப்பிரமணி, ராமசாமி, பாண்டி, விலங்கடியான், சங்கரன், சிவலிங்கம் மற்றும் 20 பேர் இருந்திருப்பார்கள்.

7. சம்பவம் நடந்த பிறகு எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் அப்போது நான் மயக்கத்தில் இருந்தேன். சுமார் 2.00 மணிக்கு மருத்துவமனை சென்றிருப்பேன். விலங்கடியான்தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார். விலங்கடியான்தான் மருத்துவரிடம் சம்பவம் குறித்து மருத்துவரிடம் கூறினார் என்றால் சரிதான். ராமசாமி மற்றும் நாட்டுத்துரை அப்போது மடத்தில் இருந்தார்களா என்றால் நான் தாக்கப்படுவதற்கு முன்பே அங்கு பெரிய சம்பவம் நடந்ததால் அதைப்பற்றி கேட்பதற்காக அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். பெரிய சம்பவம் என்னவென்று கேட்டால் EB லைன் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் என் மாமியார் 2 வது எதிரியின் தாயாரிடம் கம்பத்தை மறைத்துக் கட்டியிருந்த தகரத்தை எடுக்குமாறு சொன்னார். 2 வது எதிரியின் தாயார் என் மாமியாரை தகாத வார்த்தையால் பேசியுள்ளார். இரண்டு எதிரிகளும் என் மாமியாரை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார். என் மகள் இது குறித்து என் மனைவியுடம் சொல்ல, என் மனைவி எதிரிகளிடம் இது பற்றி கேட்டபோது என் மனைவியை எதிரிகள்

இருவரும் அடித்துவிட்டனர். மேற்சொன்ன சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 2.00 மணிக்கு முன்பாக நடந்தது. குறிப்பிட்டு எத்தனை மணிக்கு நடந்தது என்று கேட்டால் காலை 11.00 மணி முதலே சம்பவம் நடந்தது.

8. பழைய ஆயக்குடியில் இருந்து மண்டபத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் 10 நிமிடத்தில் வந்துவிடலாம். EB கம்பத்தின் கீழ்பகுதியோ, கம்பமோ சேதாரமடைந்திருந்ததா என்றால் இல்லை. சேதாரமடையாத நிலையில் EB கம்பத்தில் தகரத்தை கட்டி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் 2வது எதிரி அவரது கடையை ஒட்டி இருக்கும் கம்பத்தின் அருகே உள்ள இடத்தையும் சேர்த்து பயன்படுத்தவேண்டும் என்பதற்காக தகரத்தைக் கட்டி கம்பத்தை மறைத்துள்ளார். எவ்வளவு நாட்களாக அவ்வாறான தகரம் கட்டப்பட்டிருந்தது என்றால் சம்பவத்திற்கும் சுமார் 6 மாதங்கள் முன்பிருந்து தகரம் கட்டப்பட்டிருந்தது. தகரம் கட்டப்பட்டிருந்த இடத்திற்கும் சேர்த்து நாங்கள் வாடகை வசூலித்தோமா என்றால் இல்லை.

9. ஆறு மாத காலமாக தகரம் கட்டப்பட்டிருந்ததை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு இரண்டு நாட்கள் முன்பாக EB அலுவலகத்திற்கு நான் ஒருமுறையும், என் மாமியார் ஒருமுறையும் தொலைபேசியில் தகவல் கொடுத்தோம். EB அலுவலகத்தில் ஹெல்பர் ஒருவருக்கு தகவல் கொடுத்தோம். அவர் பெயர் ஞாபகமில்லை. நான் பணிபுரியில் இடத்தில் இருந்து 10 நிமிடத்தில் EB அலுவலகம் சென்றுவிடலாம் என்றால் சரிதான். 2வது எதிரியின் கடைக்கும், அந்த மின் கம்பத்திலிருந்துதான் மின்சாரம் செல்கிறது என்றால் சரியல்ல.

10. என்னுடைய போலீசார் விசாரணையில் 2ம் எதிரியின் அண்ணன் மற்றும் தம்பி சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். 2வது எதிரி நாங்கள் குடிவருவதற்கும் எவ்வளவு நாட்களுக்கு முன்பிருந்து அங்கு டீ–கடை வைத்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பின்பு மடத்திற்கு எதிர்புறத்தில் உள்ள கடையில் அவர்

குத்துவிளக்கு கடை தற்போது வரை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கையால் எழுதப்பட்ட புகார் கொடுக்கவில்லை. வாக்குமூலம் கொடுத்தேன். அதை போலீசார் பதிவு செய்த பிறகு படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடன் வேறு யார் கையொப்பம் செய்தார்கள் என்று ஞாபகமில்லை.

11. சம்பவம் நடந்தவுடன் நான் மருத்துவமனைக்கு சென்றபிறகு என் மனைவி காவல் நிலையத்திற்கு சென்றார். அங்கு அவர் எழுத்துமூலம் புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மனைவி நான் மயக்கம் தெளிந்து பார்க்கும்போது சுமார் 6.00 மணியளவில் மருத்துவமனையில் இருந்தார். EB அலுவலகத்திலிருந்து வந்த அலுவலர் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஹெல்பர் வந்ததாக என் மாமியார் சொன்னார். அவர் பெயர் தெரியாது. சம்பவத்திற்குப்பிறகு சுமார் ஐந்து நாட்கள் கழித்து மின்சாரப் பிரச்சனை சரி செய்யப்பட்டது. EB அலுவலகத்திலிருந்து பணியாளர்கள் வந்த விபரத்தை என்னுடைய மாமியாரும், என் மனைவியும் என்னிடம் சொன்னார்கள்.

12. EB அலுவலக ஊழியர்கள் அவர்களது மேலதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்றுத்தான் அங்கு வந்தார்களா என்று கேட்டால் எனக்கு தெரியாது. சிப்ஸ் கடை மற்றும் பிற கடைகள் எத்தனை வருடங்களாக மேற்படி மடத்தில் இயங்கி வருகிறது என்றால் நான் வருவதற்கு முன்பிருந்தே இயங்கி வருகிறது. நான் வருவதற்கு முன்பு ஏற்பட்ட பிரச்சனை குறித்து என் மாமியாரோ, என் மனைவியோ காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. மடத்திற்கும், பழனி அடிவாரம் காவல் நிலையத்திற்கும் இடையில் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி மடத்தைத் தாண்டித்தான் கோவில் நுழைவாயில் என்றால் சரிதான்.

13. அ.சா.2 தேவி, அ.சா.4 கவின்குமார், அ.சா.3 லட்சுமி ஆகியோர் என் குடும்ப உறுப்பினர்கள் என்றும், அ.சா.5 முதல் அ.சா.10 சாட்சிகள் என்னுடைய

உறவினர்கள் என்றும் சொன்னால் சரிதான். அ.சா.5 பாண்டி ஆயக்குடியில் குடியிருக்கிறார். நான் மருத்துவமனைக்கு சென்றதாகச் சொல்லும் போக்குவண்டி யாருடையது என்றால் யாருடையது என்று தெரியாது, அது இருசக்கர வாகனம். அந்த வாகனத்தில் என்னுடன் வந்தவர் விலங்கடியான். என்னுடைய மனைவி மற்றும் என் மாமியாருக்கும், 2வது எதிரியின் தாயாருக்கும் இடையில் நடந்த பிரச்சனை குறித்து 2வது எதிரியின் தாயாரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு எதிர்புறம் நகராட்சி கழிப்பறை உள்ளது என்றால் சரிதான். அங்கு எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான்.

14. நான் அரசு போக்குவரத்துக் கழகத்தில் 18 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ தினத்தன்று காலை 4.00 மணிக்கு பணிக்குச் சென்றேன். அன்றைய தினம் EB பணியாளர்கள் வந்து வேலை செய்யப்போவதாக எனக்கு யாரும் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. என்னுடைய பணி நேரம் காலை 4.00 மணி முதல் 8 மணி நேரம் ஆகும். பழனி – கோயம்புத்தூர் வழித்தடத்தில் நான் பணிபுரிந்தேன். அன்றைய தினம் பகல் 1.45 மணிக்கு எனக்கு பணி முடிந்தது. கணக்கு வழக்குகளை எத்தனை மணிக்கு எங்கள் அலுவலகத்தில் ஒப்படைத்தேன் என்றால் நான் அப்போது பணிபுரிந்த பேருந்தைப் பொறுத்தவரை பேருந்து நிலையத்தில் வைத்தே மாற்று கண்டக்டர் கணக்கு வழக்குகளை பெற்றுக்கொள்வார். அன்றைய தினம் நான் பணிபுரிந்த பேருந்தின் எண் TN 39 0021 ஆகும். அதிகாலை 4.00 மணிக்கே பணிக்குச் சென்றுவிட்டதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடம் எது என்று போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் குரும்பர் மடத்தின் முன்பு சம்பவம் நடந்ததாக சொல்லியிருக்கிறேன். குரும்பர் மடத்திலிருந்து பொதுக்கழிப்பிடம் சிறிது தூரம் தள்ளி உள்ளது என்றால் சரிதான்.

15. அன்றைய தினம் நான் பணிபுரிந்த விபரங்கள் குறித்து அலுவலக ஆவணங்களை பார்வையிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. சம்பவ சமயம் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் கத்தியை போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது, அது இருபுறமும் முனையுடைய கத்தி. நான் பேருந்து நிலையத்திலிருந்து போகும் வழியில் சம்பவம் நடந்ததாக என்னுடைய முதல் விசாரணையில் தெரிவித்துள்ளது சரியா என்றால் சரியல்ல. சம்பவ சமயம் 2ம் எதிரி நடத்தி வந்த கடையிலிருந்து 2வது எதிரியை காலி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் மீது பொய்யாக புகார் கொடுத்ததாகச் சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

16. நான்தான் எதிரியின் கடையை சேதாரப்படுத்தி அது தொடர்பாக எதிரி கொடுத்த புகாரில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மடத்தின் பொறுப்பாளர்கள் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.07 18:48:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.